ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: angelicab@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20211124

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்குகளுக்கு உதவி செய்யும் USAIDஇன் 19 மில்லியன் டொலர் பெறுமதியான புதிய 5 வருட செயற்திட்டம்

கொழும்பு, நவம்பர் 24 – சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) அதன் புதிய 19 மில்லியன் டொலர் பெறுமதியான, 5 ஆண்டுகால இலங்கை எரிசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை நவம்பர் 17ஆம் தேதி அறிவித்தது. இறுதி செய்யப்பட்டவுடன், இந்த மானியமானது 2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை 70% ஆக அதிகரிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் தொலைநோக்கிற்கு உதவிசெய்வதுடன் இலங்கையின் மின்சக்தித் துறையை ஒரு சந்தை அடிப்படையிலான, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் நீண்ட கால அமைப்பாக மாற்றுவதற்கு பங்களிப்புச் செய்யும்.

“அரசாங்க ஒருங்கிணைப்பு, சமூக ஈடுபாடு மற்றும் தனியார் துறை பங்கேற்பு ஆகியவை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கு முக்கியமான விடயங்களாகும்” என்று USAIDஇன் செயற்பணி இயக்குநர் ரீட் ஈஷ்லிமேன் கூறினார். “இலங்கை அதன் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு முன்னுரிமை வழங்கும் சந்தர்ப்பத்தில், அதனுடன் இணைந்து கொள்வதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.” என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை எரிசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் சர்வதேச வல்லுநர்கள் மற்றும் பங்குதாரர்கள் எரிசக்திச் செயற்திறனை மேம்படுத்துதல், அதிகரித்த புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு இடமளிக்கும் வகையில் மின்இணைப்புத் தொகுதியினை வலுப்படுத்துதல் மற்றும் எரிசக்தி துறையில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல் ஆகிய செயற்பாடுகளின் ஊடாக

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டின் பக்கம் திரும்புவதை துரிதப்படுத்துவார்கள். புதுமையான தொழில்நுட்பங்களின் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான குறைந்த செலவுடைய, போட்டித்தன்மையுடைய தெரிவுகளை அவர்கள் இனங்காண்பதுடன் இத்துறையில் அவற்றை ஆரம்பிப்பதற்கும் உதவிசெய்வார்கள். மேலும், இலங்கையில் போட்டித்தன்மையுடைய, 21 ஆம் நூற்றாண்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவுவதற்காக, அனைத்து குடிமக்களுக்கும் கட்டுப்படியான விலையில் பாதுகாப்பாகவும் நம்பகத்தன்மையுடனும் மின்சாரத்தை வழங்குவதற்கும் இம்முன்முயற்சி செயற்படும்.

வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய மின்சக்தி அமைச்சின் செயலாளர், “2030 ஆம் ஆண்டளவில் மின்சக்தித் துறையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கை 70% ஆக ஆக்குவதற்கும் மற்றும் 2050 ஆம் ஆண்டளவில் கார்பன் நடுநிலைமையினை எட்டுவதற்கும் தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளைப் பூர்த்திசெய்வதற்கு இலங்கை தற்போது உறுதிபூண்டுள்ளது. இவை மிகப்பெரிய இலக்குகள், அவற்றை அடைவதற்கு நாம் அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எனவே, அவ்வாறு செய்வதற்கு உங்கள் ஆதரவும், உதவியும், ஊக்கமும் முக்கியமானதாகும். தூய்மையான, பசுமையான ஒரு நாட்டை உருவாக்குவதற்கு உதவிசெய்வதற்காக, எரிசக்திச் செயற்திறனுக்குப் பொறுப்பான அனைத்து பங்குதாரர்களுக்கிடையிலும் அவர்களது முயற்சிகளை ஒருங்கிணைத்தலும் எமக்கு அவசியமாகும்.” எனக் கூறினார்.

இது இலங்கையின் அபிவிருத்திப் பயணத்திற்கு உதவிசெய்வதற்கும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கும் அமெரிக்க மற்றும் இலங்கை மக்களுக்கு இடையிலான நீண்டகால பங்காண்மையின் ஒரு அங்கமாகும். இலங்கையில், 1961ஆம் ஆண்டு முதல் மொத்தம் ரூ.350 பில்லியனுக்கும் (2 பில்லியன் அமெரிக்க டொலர்) அதிகமான பெறுமதியுடைய USAIDஇன் நிகழ்ச்சிகள், ஒரு ஆரோக்கியமான, கல்வியறிவுள்ள மற்றும் தொழில்புரியும் மக்கள்கூட்டத்தினை ஊக்குவிக்கிறது. USAIDஇன் பணிகள் பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கு, usaid.gov/sri-lanka எனும் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.